பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
07 09 2026 MONDAY 6 30 PM
வணக்கம் – மாநிலச்செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

- பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமம், ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- நாடுமுழுவதும் 300 வேளாண் அறிவியல் மையங்கள் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் மேம்படுத்தப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- சர்க்காரியா கமிஷன் குறித்து நேருக்கு நேர் விவாதிக்க முதலமைச்சர் திரு. விஜய் தயாரா என்று திமுக வினவியுள்ளது.

- கேமரூன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 3 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 9ஆம் தேதி தொடங்கி, 16ஆம் தேதிவரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மனுக்கள் மீதான பரிசீலனை 17ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 19ஆம் தேதி கடைசிநாளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் அஇஅதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி. மரகதம் குமரவேலும், தாராபுரம் தொகுதியில் அஇஅதிமுக சார்பில்

தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி. சத்தியபாமாவும் தங்களது பதவிகளை ராஜினமா செய்ததை அடுத்து, இந்த இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாட்டின் எல்லைப் பகுதியை ஒட்டிய கிராமங்களின் மேம்பாட்டிற்காக 11 ஆயிரத்து 639 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர். இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்து 616 கிராமங்கள் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமம், ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் 98 சதவீதம், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களாக இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் 300 வேளாண் அறிவியல் மையங்கள் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் மேம்படுத்தப்படவுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதற்கான செயல்திட்டம் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

வேளாண் அறிவியல் மையங்களை நவீனமயமாக்குவதற்கு மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அடுத்த இரண்டாண்டுகளுக்குள், அனைத்து வேளாண் அறிவியல் மையங்களிலும் திறன் மேம்பாட்டு பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்று திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

விண்வெளித் திட்டங்களில் தனியார் பங்களிப்புக்கு ஊக்கமளிக்கப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இருப்பினும் இஸ்ரோ தனியார்மயமாக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

இஸ்ரோவின் செயல்பாடுகளுக்கு தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகவும் திரு. நாராயணன் கூறினார்.

>>>>>>><<<<<<

சர்க்காரியா கமிஷன் குறித்து நேருக்கு நேர் விவாதிக்க முதலமைச்சர் திரு. விஜய் தயாரா என்று திமுக அமைப்புச் செயலாளர் திரு. ஆர்.எஸ் பாரதி வினவியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க அரசுக்கு எதிராக திமுக வைத்த குற்றச்சாட்டுகளை திசைதிருப்பும் நோக்கில் முதலமைச்சர் திரு. விஜய், சட்டப்பேரவையில் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளதாக கூறினார்.

காவல்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் எழுப்பிய கேள்விகளுக்கு முதலமைச்சர் உரிய பதில் அளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

திமுக-வின் வரலாறு தெரியாமல் திரு. விஜய் பல்வேறு கருத்துகளை தெரிவிப்பதாகவும் திரு. ஆர்.எஸ் பாரதி குறை கூறினார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில், த.வெ.க அரசு ஆடம்பர செலவுகளை தவிர்க்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதலமைச்சரின் அலுவலகத்தை மாற்றியமைப்பதற்காக 6 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய தலைமைச்செயலகம் கட்டப்படும் என்று அறிவித்துவிட்டு, முதலமைச்சர் அலுவலகத்தை மாற்றுவதற்கு இந்த தொகையை செலவிடுவது ஏன் என்றும் அவர் வினவியுள்ளார்.

மாநில அரசின் நிதி ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தரப் பிரிவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

காய்கறிகள், மளிகைப்பொருட்கள், எண்ணெய், சர்க்கரை, அரிசி ஆகியவற்றின் விலை 20 முதல் 35 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு, பதுக்கலை தடுக்கவும், அத்தியாவசிய பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte - வி ஆர் துரை - 52 Sec. )

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டத்தில், குறுவை பருவத்திற்கான பயிர் காப்பீடு செய்வதற்கு வரும் 15-ஆம் தேதிக்குள் தேசிய பயிர் காப்பீட்டு இணையத்தில் பதிவு செய்யுமாறு ஆட்சியர் திருமதி. சரண்யா ஹரி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

கடலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று வழங்கினார்.

>>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" முகாம் நாளைமறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி. கவிதா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

*நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 5 ரூபாய் 30 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

>>>>>>><<<<<<

*மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மேற்கு கால்வாய் கரையோர மக்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 400 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.*

>>>>>>><<<<<<

*திருத்தணி முருகன் கோவிலில், பக்தர்களிடம் செல்ஃபோன் வாங்கி பாதுகாக்கும் நடைமுறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.*

>>>>>>><<<<<<

*திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகேயுள்ள அருள்மிகு அகஸ்தீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.*

>>>>>>><<<<<<

*சென்னை மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன், அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

>>>>>>><<<<<<

***விளையாட்டுச் செய்திகள்***

*கேமரூன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 3 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் Hmar Lalthazuala தங்கப்பதக்கத்தையும், Tankara Gnana Dattu Talasila வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

*மகளிர் இரட்டையர் பிரிவில் Simran Singh – Kavipriya Selvam இணை தங்கப்பதக்கத்தையும், Rutaparna Panda – Sweta Parna இணை வெள்ளிப்பதக்கத்தையும் வென்றன.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் Dhruv Rawat – Maneesha இணை தங்கப்பதக்கம் வென்றது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவில் Sai Pratheek - Ruban Kumar Rethina Sabapathy இணை வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.*

>>>>>>><<<<<<

*ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sujit Kalkal தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>>>><<<<<<*

*Iceland-ல் நடைபெற்ற சர்வதேச வாள்வீச்சுப் போட்டியில் இந்தியாவின் பவானி தேவி தங்கப்பதக்கம் வென்றார்.*

*>>>>>>><<<<<<*

*US Open Junior டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 6-2 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Emery Combs-ஐ வென்றார்.*

*>>>>>>><<<<<<*

*டேவிஸ் கோப்பை ஜூனியர் டென்னிஸ் இறுதிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Ribhav Saroha தலைமையிலான இந்த அணியில் Hruthik Katakam உட்பட 16 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*இப்போட்டி எகிப்தின் கெய்ரோவில் நவம்பர் மாதம் 2ஆம் தேதி தொடங்கி, 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

*>>>>>>><<<<<<*

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.*

*>>>>>>>END<<<<<<*